Tnpsc Tamil Current Affairs - www.winmeen.com



## பேரரசுச் சோழர்கள்

*** பேரரசுச் சோழர் மரபைத் தோற்றுவித்தவர் விஜயாலய சோழன் [ கிபி 815 ]**

## பேரரசுச் சோழர்கள் :-

*** பேரரசுச் சோழர் மரபைத் தோற்றுவித்தவர் விஜயாலய சோழன் [ கிபி 815 ]**

**1. விஜயாலய சோழன் - [ கிபி 815 ]**

**2. முதலாம் ஆதித்த சோழன் - [ 871 - 907 ]**

**3. முதலாம் பராந்தகன் - [ 907 - 955 ]**

**4. கண்டராதித்தன் - [ 949 - 957 ]**

**5. அரிஞ்சயன் - [ 956 - 957 ]**

**6. இரண்டாம் பராந்தகன் [ 956 - 973 ]**

**7. ஆதித்தன் [ 956 - 966 ]**

**8. உத்தம சோழன் [ 965 - 985 ]**

**9. முதலாம் இராஜராஜ சோழன் [ 985 - 1014 ]**

**10. முதலாம் இராசேந்திரன் [ 1012 - 1044 ]**

**11. முதலாம் இராசாதிராசன் [ 1018 - 1054]**

**12. இரண்டாம் இராசாதிராசன் [ 1056 - 1064]**

**13. இராசமகேந்திரன் [ 1060 -1063]**

**14. வீர ராசேந்திரன் [ 1063 - 1070 ]**

**15. அதி இராசேந்திரன் [ 1067 - 1070 ]**

**16. முதலாம் குலோதுங்க சோழன் [ 1071 - 1122 ]**

**17. கடைசி சோழ மன்னன் மூன்றாம் ராஜேந்திரன்**

Tnpsc Tamil Current Affairs - www.winmeen.com



* சங்க காலத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு சோழர்கள் உறையூரில் சிற்றரசர்களாக வாழ்ந்து வந்தனர்.

* சோழர்களின் வரலாறு மிகவும் பழமையானது. மகாபாரதத்திலும், அசோகரின் கல்வெட்டுகளிலும், மெகஸ்தனிஸ், தாலமி ஆகியோரது குறிப்புகளிலும் சோழர்களைப் பற்றிய செய்திகளை காணமுடிகிறது.

* சோழர்களின் அன்றைய தலைநகர் உறையூர். அடுத்து [ தஞ்சை ].

* சின்னம் - புலி

* முற்காலச் சோழரான கரிகாலன், காவிரி ஆற்றின் குறுக்கே கல்லணையை கட்டினார்.

* கிபி 9 ஆம் நூற்றாண்டின் இடையில் பிற்காலச் சோழர்கள் வலிமை பெற்றனர்.

## 1. விஜயாலய சோழன் :

* பேரரசு சோழர் மரபைத் தோற்றுவித்தவர் விஜயாலய சோழன் [ கிபி 815 ]. இவர் முத்தரையர்களிடமிருந்து தஞ்சையைக் கைப்பற்றினார். அங்கு துர்கை கோயிலையும் கட்டினார்.

## 2. முதலாம் ஆதித்த சோழன் :-

* விஜயாலய சோழனின் மகன் முதலாம் ஆதித்த சோழன், அபராஜித பல்லவனை முறியடித்து பல்லவர் ஆட்சிக்கு முடிவுகட்டி தொண்டை மண்டலத்தையும் சோழப் பேரரசோடு இணைத்துக் கொண்டார்.

## 3. முதலாம் பராந்தகன் :- [ 907 -955 ]

* முதலாம் பராந்தக சோழன் முற்கால சோழ அரசர்களில் குறிப்பிடத்தக்கவர். முதலாம் பராந்தக சோழன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து அதன் தலைநகரை வென்றதால் " மதுரை கொண்டான் " என்று புகழப்பட்டார்.

Tnpsc Tamil Current Affairs - www.winmeen.com



*** புகழ் பெற்ற தக்கோலம் போரில் இராட்டிடகூட மன்னர் மூன்றாம் கிருஷ்ணரிடம் தோற்று 955 இல் மரணமடைந்தார்.**

*** சிதம்பரம் நடராஜன் ஆலயத்தின் கூரைக்கு பொற்கூரை வேய்ந்தவன் முதலாம் பராந்தக சோழன். முதலாம் பராந்தக சோழன் காலத்தைச் சார்ந்த உத்திரமேரூர் கல்வெட்டுகள் இரண்டு சோழர் காலத்தில் நிலவிய கிராம ஆட்சிமுறை பற்றி விளக்கங்களை கூறுகிறது.**

**9. முதலாம் ராஜராஜன் [ 985 முதல் 1014 ]**

*** சோழமரபில் ஆட்சி செய்த மன்னர்களில் மிகச் சிறந்த ஆட்சியாளர் முதலாம் முதலாம் ராஜராஜன் ஆவார்.**

*** முதலாம் ராஜராஜன் இலங்கை மன்னன் ஐந்தாம் மகிந்தனையும் வென்று, இலங்கையின் தலைநகரை அனுராதபுரத்திலிருந்து பொலநருவா [ பொலனருவுக்கு ] மாற்றினார். அங்கு ஒரு சிவன் கோயிலையும் கட்டினார்.**

*** முந்நீர் பழந்தீவுகள் எனப்பட்ட மாலத்தீவுகளையும் வென்றார். காந்தளூர் சாலை [ திருவனந்தபுரம் ] என்ற இடத்தில் சேர மன்னன் பாஸ்கர ரவிவர்மனுடைய கடற்படைகளை முறியடித்தான்.**

*** பாண்டிய அரசன் அமரபுஜங்கன் தோற்கடிக்கப்பட்டான். பாண்டிய நாட்டில் சோழர் ஆட்சி ஏற்படுத்தப்பட்டது.**

*** கல்யாணியை ஆண்ட சத்யசரயாவிடமிருந்து வேங்கியைக் கைப்பற்றி சக்திவர்மனுக்கு அளித்தார். இவருடைய மகளை [ குந்தவை ] சக்திவர்மனின் சகோதரர் விமலாதித்தனுக்கு மணமுடித்தார். மேலும் கங்கவாடி, தடிகையாடி, நொளம்பாடி ஆகிய மைசூரின் பகுதிகளையும், ரெய்ச்சூர் தோ ஆப் பகுதியையும் வென்றார்.**

*** மும்முடிச்சோழன், ஜெயங்கொண்டான், சிவபாதசேகரன் போன்ற விருதுப்பெயர்களையும் முதலாம் ராஜராஜன் சூட்டிக்கொண்டான்.**

*** இவர் சைவ சமயத்தைப் பின்பற்றினார். இவரது காலத்தில் தான் தேவாரம் தொகுக்கப்பட்டது.**

Tnpsc Tamil Current Affairs - www.winmeen.com



*** கிபி 1010 இல் தஞ்சையில் பிரகதீஸ்வரர் ஆலயத்தைக் கட்டினார்.**

*** நாகப்பட்டினத்தில் புத்த மடாலயம் கட்டுவதற்கும் அவர் உதவிகளை வழங்கினார்.**

**முதலாம் ராஜேந்திரன் [ 1012 - 1044 ]**

* இராஜராஜ சோழனின் மகனான ராஜேந்திர சோழன் தன் தந்தையின் வழியில் சோழப் பேரரசை விரிவுபடுத்தினார்.

* இடைதுறைநாடு [ ரெய்ச்சூர் தோ ஆப் ], வனவாசி [ கடம்பர் தலைநகர் ], கொள்ளிப்பாக்கை [ ஹைதராபாத் பகுதி ], மண்ணைக்கடக்கம் [ மால்கெட் ] ஆகிய இடங்களை வென்றார். ஈழமண்டலம் எனப்பட்ட இலங்கை முழுவதையும் கைப்பற்றினார்.

* வங்காளத்தின் மீது படையெடுத்த இராசேந்திரன், அந்நாட்டு மன்னர் மகிபாலனை வென்றார். இவ்வெற்றியின் நினைவாக "கங்கை கொண்ட சோழபுரம்" என்னும் நகரை நிறுவினார். அங்கு புகழ் வாய்ந்த ராஜேஸ்வர ஆலயத்தையும் அவர் எழுப்பினார். அந்நகரின் மேற்குப் பகுதியில் சோழகங்கம் என்ற நீர்ப்பாசன ஏரியையும் வெட்டுவித்தான்.

* ஸ்ரீவிஜயம், கடாரம், மற்றும் நிக்கோபார் தீவுகளைச் சார்ந்த பகுதிகள் மற்றும் மலேயா தீபகற்பம் ஆகிய இடங்களை கடல் கடந்து போரிட்டு வென்றது இவரது மிகச்சிறந்த செயலாகும். இவருக்கு கங்கை கொண்டான், பண்டித சோழன், கடாரம் கொண்டான், முடி கொண்டான் போன்ற சிறப்புப் பெயர்கள் முதலாம் ராஜேந்திரனின் சிறப்புப் பெயர்கள்.

* தனது மகள் அம்மங்கா தேவியை வெங்கிச் சாளுக்கிய இளவரசனுக்கு மணமுடித்துக் கொடுத்தார்.

* சோழ - சாளுக்கிய எல்லையாக துங்கபத்திரை நதி அங்கீகரிக்கப்பட்டது.

**முதலாம் குலோதுங்க சோழன் [ 1071 - 1122 ]**

* முதலாம் ராஜேந்திரனின் மகள் அம்மங்கா தேவியின் வாரிசாக உதித்தவனே முதலாம் குலோதுங்க சோழன். இவர் சோழப் பேரரசனாக பதவியேற்றதால் வெங்கிநாடும் சோழப் பேரரசுடன் இணைந்தது.

* முதலாம் குலோதுங்கன் 72 வணிகர்கள் அடங்கிய தூதுக்குழுவை சீனாவிற்கு அனுப்பி வைத்தார்.

* சாளக்கிய - சோழ மரபைத் தோற்றுவித்தவர் முதலாம் குலோதுங்கன்.

* முதலாம் குலோதுங்க சோழன் ஆட்சியில் இலங்கை சோழப்பேரரசிலிருந்து விடுதலை பெற்றது. ஸ்ரீவிஜயம் நாட்டுடன் முதலாம் குலோதுங்க சோழன் நட்புறவு கொண்டிருந்தார்.

* முதலாம் குலோதுங்க சோழன் நிலங்களை அளந்து வரி விதித்ததோடு , சுங்க வரியை நீக்கினார். எனவே முதலாம் குலோதுங்க சோழன் " சுங்கம் தவிர்த்த சோழன் " எனப் போற்றப்பட்டார்.

* சோழ மன்னன் மூன்றாம் ராசேந்திரன் காலத்தில் [ 1246 - 1279 ] சோழப்பேரரசு சிதைவுற தொடங்கியது.

* காடவராயன் போன்ற குறுநில மன்னர்களின் எழுச்சி , பாண்டிய நாட்டு எழுச்சி ஆகியவை சோழ அரசை நிலைகுலையச் செய்தது.

* பாண்டிய மன்னன் இரண்டாம் ஜடாவர்ம சுந்தர பாண்டியன், சோழ நாட்டின் கடைசி அரசனான மூன்றாம் ராசேந்திரனை வென்று சோழ நாட்டைக் கைப்பற்றினார்.

## சோழர் ஆட்சி முறை :-

* சோழ நாட்டின் நிர்வாக அடிப்படை அழகு "ஊர்".

* ஊர் --> வளநாடு --> மண்டலம் --> சோழநாடு

* பெருந்தனம், சிறுதனம் என்று அழைக்கப்பட்ட அதிகாரவர்க்கம் ஆட்சிக்குப் பொறுப்பு வகித்தன.

* கிராம சபை உறுப்பினர்கள் குடவோலை முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டனர். [ 30 உறுப்பினர் ]

* 6 வாரியம் சோழர் காலத்தில் இருந்தன. [1] சம்வத்சர வாரியம் [2] ஏரி வாரியம் [3] தோட்ட வாரியம் [4] பஞ்சவாரியம் [5] பொன்வாரியம் [6] புறவு வாரியம்

## சமுக பொருளாதார நிலை:

* சோழர் காலத்தின் பிற்பகுதியியைச் சார்ந்த கல்வெட்டுகளில் வலங்கை, இடங்கை சாதிப்பிரிவுகளைப் பற்றி குறிப்புகள் காணப்படுகின்றன.

* சதி வழக்கம் இருந்தது. கோயில்களுடன் பிணைக்கப்பட்டிருந்த நாட்டிய மகளிர் அடங்கிய தேவதாசி முறை சோழர் காலத்தில் தான் தோன்றி வளர்ந்தது.

* வேளாண்தொழில் வளர்ச்சி பெற்றது. நெசவு, உலோக உருக்குத் தொழில் வளர்ச்சி பெற்றன. காஞ்சியில் பட்டு நெசவு புகழ்பெற்று விளங்கியது. சீனா, சுமத்ரா, ஜாவா, அரேபியா போன்ற நாடுகளுடன் வாணிபம் நடைபெற்றன. அரபு நாட்டுக் குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டன.

* **வரி பொத்தகம்:-** வரி விதிப்பு நடைமுறைகளை சோழர்காலத்தில் ஓலைச்சுவடிகளில் எழுதித் தொகுத்தனர். இது வரி பொத்தகம் எனப்பட்டது.

* இராஜராஜன் காலத்தில் [1001] வரிவிதிப்புக்கான கணக்கெடுப்பு பணி சேனாதிபதி குரவன் என்பவரால் மேற்கொள்ளப்பட்டது.

## சமயமும் கல்வியும் :-

* சோழ வேந்தர்கள் சைவ சமயத்தின் மீது ஈடுபாடு கொண்டிருந்தனர்.

* ஆலயங்களும், மடங்களும் கல்வி மையங்களாக விளங்கின. இங்கு வேதங்கள், புராணங்கள், கணிதம், மருத்துவம், ஆகியன கற்பிக்கப்பட்டன. இவைகளை பற்றிய குறிப்புகளை எண்ணாயிரம், திருமுக்கூடல், திருபுவனம் ஆகிய இடங்களில் உள்ள கல்வெட்டுகள் மூலம் அறியலாம்.

## கல்வி, இலக்கியம்:-

* சோழர் காலத்தில் கல்விக்கு முக்கியத்தும் அளிக்கப்பட்டது.

1] சேக்கிழார் - பெரியபுராணம்

**2] திருத்தக்க தேவர் - சீவக சிந்தாமணி**
**3] கம்பர் - கம்பராமாயணம்.**
**4] செயம் கொண்டார் - கலிங்கத்துப்பரணி**
**5] சைவ நூலான பன்னிரு திருமுறைகளை நம்பியாண்டார் நம்பியும், வைணவ நூலான நாலாயிர திவ்ய பிரபந்தத்தை நாதமுனிவரும் தொகுத்தனர்.**
**6] ஒட்டக்கூத்தர் - மூவருலா, குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ், தக்கயாபரணி**
**7] உரையாசிரியர்களான இளம்பூரனார், நச்சினார்க்கினியர், பரிமேலழகர், சமண முனிவரான அமிர்தசாகரர் ஆகியவர்கள் சோழர் காலத்தைச் சார்ந்தவர்கள்.**
**8] புகழேந்திப்புலவர் - நளவெண்பா**
**9] கல்லாடனார் - கல்லாடம்**
**10] பவணந்தி முனிவர் - நன்னூல்**
**11] புத்தமித்திரர் - வீரசோழியம்**

**கலையும், கட்டிடக்கலையும்:-**

*** திராவிட பாணியிலான கலைகள்**

*** சோழர் காலத்தின் தனிச்சிறப்பு - விமானம் [ கட்டிடக்கலை ]**

- **முற்காலச் சோழர்களின் கட்டிடக்கலையானது எளிமையான வேலைப்பாடுகளை உடையதாகும். நர்மதா மலையின் விஜயாலய சோழீஸ்வரம், கொடும்பாளூரின் ஐவர் கோவில் ஆகியன இக்கலத்தைச் சார்ந்தவை.**

*** பிரகதீஸ்வரர் ஆலயத்து விமானத்தின் உயரம் 216 அடி. அறையின் மீது கட்டப்பட்ட விமானம் 13 அடுக்குகள்.**

*** சோழர் காலத்திய செப்புத்திருமேனிகள் உலகப் புகழ் பெற்றவை.**

*** சோழர் கால நிலவருவாய் துறை நன்கு சீரமைக்கப்பட்டிருந்தது. அது புரவுவரித் திணைக்களம் என்று அழைக்கப்பட்டது.**

*** கல்வெட்டுகளில் சுமார் 80 படைப்பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளன.**

*** அரசரின் தனிப்படை கைக்கோளப்பெரும்படை என்று அழைக்கப்பட்டது.**

*** ராணுவ முகாம்கள் கடகங்கள் என்று அழைக்கப்பட்டன.**

*** நுண்கலை எனப்படும் இசைக்கலையானது வளர்ச்சி பெற்ற காலம் . இன்றைய கர்நாடக இசைக்கு சோழர்காலத்தில் தான் அடித்தளமிடப்பட்டது. பாரத நாட்டியம் தோன்றியது.**

*** 850 முதல் 1279 வரை சோழர்கள் [ 430 ஆண்டுகள் ]**

Tnpsc Tamil Current Affairs - www.winmeen.com